# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## அசல் வழக்கு எண். 56/2022

## நாள்: 28-02-2024

பெயர் :சுசீலா

**PW1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காண்பிக்கப்படும் பாரத வங்கி கிளை மேலாளர்க்கு நான் எழுதிய கடிதம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். அதில் மூன்றாம் பிரதிவாதி தான் செய்த செலவுகளை ஒரு பட்டியல் இட்டுள்ளார் அதனை நான் படித்து பார்த்தேன். பிரதிவாதிகள் செய்த செலவு பட்டியலை நான் ஒவ்வொரு இணமாக நான் பிரமாண பத்திரத்தில் மறுத்து கூறவில்லை என்றால் சரிதான். மொத்தமாக மறுத்துள்ளேன். வழக்கு சொத்தில் முதல் சொத்தாக நாகப்பட்டினத்தில் கல்லுகார தெருவில் உள்ள காலனி வீடு முதல் அயிட்டமாக சேர்த்துள்ளேன். அந்த காலனி வீட்டிற்கு குறைந்தது 10 வருடத்திற்கு முன்புதான் சென்றேன். அந்த காலனி வீடுகள் அத்தனையும் குடியிருக்க இலாயக்கு இல்லாமல் 20 வருடங்களுக்கு மேலாக காலியாகதான் உள்ளன என்றால் சரியல்ல. அந்த காலனி வீடுகளுக்கான நகராட்சி வரியை மூன்றாம் பிரதிவாதிதான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த காலனி வீடுகளை நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் இடித்து அப்புரப்படுத்திவிட்டனர். வழக்கிற்கு முன்பாகவே அந்த காலனி வீடுகள் இடிக்கப்பட்டு வெறும் அடி மனைக்கு மூன்றாம் பிரதிவாதி நகராட்சி வரி செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த காலனி வீடுகள் 20 வருடங்களாகவே குடியிருக்க இலாயக்கு இல்லாமல் போய்விட்டன என்பதால் அதில் இருந்து எந்த வாடகையும் வசூல் செய்யபடவில்லை என்றால் சரியல்ல. இரண்டாவது சொத்தாக காண்பிக்கப்பட்டவை அந்தனப்பேட்டை கிராமத்தில் உள்ள நஞ்சை நிலங்கள் ஆகும். அந்த நிலங்களுக்கு அருகில் கிழக்கு கடற்கரை சாலை அமைக்கப்பட்ட விவரமே எனக்கு தெரியாது

என்றால் சரிதான். அந்த நிலங்களில் விவசாயம் நடக்கிறதா என்ற விவரம் எனக்கு தெரியாது. 20 வருடங்களுக்கு முன்பாக கிழக்கு கடற்கரை சாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது, தற்போது 4 வழிசாலையாக அது மாற்றி அமைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இந்த இரண்டாவது அயிட்ட சொத்துக்கு அருகில் கிழக்கு கடற்கரை சாலை அமைப்பதற்காக அரசாங்கத்தால் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்மந்தமாக விசாரணையில் கலந்து கொள்ளவும் பணம் பெறவும் மூன்றாம் பிரதிவாதிக்கு கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். ஆனால் அவர் எனக்குள்ள பாக விகிதம் கொடுக்கவில்லை. எனக்குள்ள பாக பங்கு தொகை ரூ.52 ஆயிரத்தை மூன்றாம் பிரதிவாதி தரப்பில் செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இரண்டு தவனைகளில் இழப்பீடு கொடுக்கப்பட்டது, முதல் தவனையை மூன்றாம் பிரதிவாதி என்னிடம் கொடுக்கவில்லை அதனால் தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. எனக்கு சேர வேண்டிய மொத்த தொகை ரூ.52 ஆயிரம் என்றால் சரியல்ல. இரண்டாவது அயிட்ட சொத்திற்கு பட்டா மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் சிட்டா அடங்கல் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் நாகப்பட்டினம் உரிமியியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 106/2021 தாக்கல் செய்வதற்கு பிரதிவாதிகளுக்கு அதிகாரம் கொடுத்தேன் என்று தெரிவித்துள்ளேன். அந்த வழக்கில் நான் பிரதிவாதியாகதான் சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கை தாக்கல் செய்ய மூன்றாம் பிரதிவாதி என்னை தொடர்பு கொண்டார் ஆனால் ஒத்துழைப்பு நல்காத காரணத்தால் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு ஒரு சர்சை எங்களுடைய இடத்தில் விரிவாக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். அந்த வழக்கு சர்ச் நிறுவாகத்தால் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரிதான். அந்த வழக்கின் தற்போதைய நிலை எனக்கு தெரியாது. மூன்றாவது அயிட்ட சொத்திற்கு வில்லங்க சான்று எதுவும் பெற்று பார்க்கவில்லை. சட்டத்திற்கு புரம்பாக ஏற்படுத்தப்பட்ட அந்த கிரய

ஆவணம் நீக்குரவு செய்யப்பட்டு விட்டதா என்று எனக்கு தெரியாது. சர்ச் நிர்வாகத்தினரே மனு செய்து கிரய ஆவணத்தினை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. 4 வது அயிட்ட சொத்தில் எனது மாமியார் தான் குடியிருக்கிறார் மற்ற யாரும் குடியிருக்கும் விவரம் எனக்கு தெரியாது. 4 வது அயிட்ட சொத்திற்கான வாடகை இந்து சமய அறநிலையத் துறை இணை இயக்குனரால் உயர்த்தப்பட்டு சுமார் ரூ.2,50,000/- வாடகை பாக்கியை மூன்றாம் பிரதிவாதி தனது சொந்த பணத்தை கொண்டு செலுத்தியுள்ள விவரம் எனக்கு தெரியாது. 5 வது அயிட்ட சொத்து 70 ஆண்டுகளுக்கு முன் பழமையான கட்டிடம் என்று சொன்னால் சரிதான். ஆனால் வாடகை தற்போது வரை பிரதிவாதிகள் வாங்கி கொண்டு இருக்கிறார்கள். தற்போது மூன்று வீடுகளும் யாரும் குடியிருக்கவில்லை சேதமாகிதான் கிடக்கிறது என்றால் வாடகை வாங்கி கொள்கிறார்கள் என்ற விவரத்தை எனது அம்மா மூலமாக கேள்விபட்டேன். எனது மாமனாருக்கு சொந்தமாக உத்தரகோசம்மங்கை என்ற ஊரில் மற்றொரு இடம் இருந்தது என்றால் சரிதான். அந்த இடம் நானும் இரண்டாம் வாதியும் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து கையெழுத்து போட்டுதான் விற்பனை செய்தோம். மேற்படி இடம் விற்பனை செய்த விவரத்தை எனது வழக்குரையிலோ, நிரூபண பிரமான பத்திரத்திலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அந்த இடம் எந்த வருடம் விற்பனை செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த இடம் விற்பனை செய்யப்பட்டது இரண்டாம் வாதி திருமணத்திற்காக தான் என்றால் சரியல்ல. அந்த இடம் விற்பனை செய்யப்பட்டதில் வந்த கிரய தொகை மற்றும் மூன்றாம் பிரதிவாதி தனது சொந்த உழைப்பை கொண்டு வாங்கி தந்த நகைகள் அவற்றை தவிர இரண்டாம் வாதிக்கு திருமணம் செய்ய எனக்கு வேறு நிதி ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 6 வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்து என்பது எனது மாமனார் பெயரில் உள்ளது அல்ல முதல் பிரதிவாதியான எனது மாமியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து எனது மாமியாரின் தகப்பனார் கொடுத்த நிதியை கொண்டு

வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது மாமனார் தான் வாங்கி வைத்தார். எனது மாமனார் தான் 6 வது அயிட்ட சொத்தை வாங்குவதற்கு பணம் கொடுத்தார் என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. நான் வழக்கில் கூறுவது போல் வழக்கு சொத்துகளில் இருந்து எந்த வருமானமும் வரவில்லை என்றும் மூன்றாம் பிரதிவாதி தனது சொந்த பணத்தை கொண்டு செய்த பராமரிப்பு செலவுகளை எனக்கு ஒதுக்கப்படும் பாக விகிதத்தல் இருந்து ஈடு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 பாரத வங்கி கிளை மேலாளருக்கு நான் எழுதிய கடிதம் என்றால் சரிதான். அந்த கடிதத்தில் எனது கணவருக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது அதனால் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்கு மேலும் அவகாசம் வழங்க வேண்டும் என கூறி அந்த கடிதத்தில் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். சொத்துகளை அதிகமாக பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தவறான விவரங்களை கொண்டு வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் தாவா படி எனக்கு தீர்ப்பாக வேண்டியதல்ல என்றால் சரியல்ல.